# வணிகப் புள்ளிவிபரவியல் பாடப் பரப்பும் அதன் தன்மையும்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

தேர்ச்சி மட்டம் 1.1.1

## செயற்பாடு 01

- தேவைகள் விருப்பங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன அவற்றினை கீழே காட்டப்படும் அட்டவணையில் வேறுபடுத்தி காட்டுக

இடியப்பம், சோறு, உணவு, தொப்பி, வளையல், உடை, நூடில்ஸ், பாண், தனியார் வைத்தியசாலை, தொலைநகல், பொழுதுபோக்கு, பொலிஸ்படை, போக்குவரத்து, வைத்திய பரிசோதனை, சேலை, தனியார்துறை, பாதுகாப்புச் சேவை, சுடிதார், தொடருந்து, பாதணி, விடுதி, தனியார் பாடசாலை, குடிசை, தொலைபேசி இராணுவப் பாதுகாப்பு, பாடசலைக் கல்வி, முத்திரை சேகரித்தல், தேநீர், புத்தகம் வாசித்தல்

| தேவைகள் | விருப்பங்கள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

## செயற்பாடு 02

மாணவர்களாகிய உங்களது தேவைகளை நிறைவு செய்யும் நிறுவங்ளுள் சில கீழே தரப்பட்டுள்ளன

- வெதுப்பக உற்பத்தி வணிகம்
- தைக்கப்பட்ட ஆடை உற்பத்தி வணிகம்
- அரச வைத்தியசாலை
- நூலகம்
- போக்குவரத்துச சேவைகளை வழங்கும் நிறுவனம்

1) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு வணிகங்களினூடாகவும் நிறைவேற்றப்படுகின்ற மனித தேவைகள் எவை?

2) அத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு உங்களுக்கு வழங்கப்படுபவை எவை?

தொகுப்பு :-

கணினி வடிவமைப்பு :- திரு. க .வினுஜன், த.தொ.தொ ஆசிரியர் (யா/வட்டு இந்துக்கல்லூரி )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## செயற்பாடு 03

* விடய ஆய்வுகள் சில கீழே தரப்படுகின்றன

- தனி நபரொருவர் தனக்குரிய வீட்டினை இன்னொரு தனிநபருக்கு விற்பனை செய்தல்
- நெய் உற்பத்தியில் ஈடுபடும் ஒருவர் அவற்றை போத்தலில் அடைத்து சில்லறை வியாபார நிறுவனங்களுக்கு விற்பனை செய்தல்
- தந்தை தனது மகளுக்கு காணியொன்றை நன்கொடை உறுதிப்பத்திரத்தினூடாக எழுதி ஒப்படைத்தல்
- சிகை அலங்கார நிலையமொன்றின் ஊழியர் அரச ஊழியர் ஒருவருக்கு சிகை அலங்காரம் செய்தல்
- தாயொருவர் தனது மகளுக்கு ஆடை ஒன்றினை தைத்து அணிவித்தல்
- தந்தையொருவர் தனது வீட்டுத் தோடடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கீரை வகைகளை தினந்தோறும் உணவிக்காகப் பயன்படுத்துதல்
- தாயொருவர் தனது வீட்டுத் தோடடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறிகளில் மேலதிகமானதை அருகில் உள்ள சில்லறை வியாபார நிலையத்திற்கு விற்பனை செய்தல்

1) மேலே தரப்பட்ட விடய ஆய்வுகளின் படி அவை ஒவ்வொன்றும் வணிக நடவடிக்கையா?இல்லையா? என்பதைக் குறிப்பிடுக.

2) அவற்றை நீங்கள் அவ்வாறு குறிப்பிடுவதற்கான காரணங்களை தருக.

## செயற்பாடு 04

* உமது அயற்சூழலில் செயற்படுகின்ற வணிகமொன்றை உதாரணமாக எடுத்து அதில் காணப்படுகின்ற பண்புகளினூடாக அது வணிகமொன்றென்பதை உறுதிப்படுத்துக?



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## செயற்பாடு 05

* கீழே உற்பத்தி நிறுவனங்கள் சில தரப்படுகின்றன

- ♦ மரத்தளபாடங்களை உற்பத்தி செய்யும் நிறுவங்கள்
- ♦ தைக்கப்பட்ட ஆடைகளை உற்பத்தி செய்யும் நிறுவனம்
- ♦ பழச்சாறினை போத்தலில் அடைத்து விற்பனை செய்யும் நிறுவனம

மேற்குறிப்பிட்ட வணிகங்களின் உற்பத்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களில் வளங்களுக்கு பெறுமதி சேர்க்கப்படுத்தல் இடம்பெறும் என்பதை உதாரணம் மூலம் விளக்குக .

## செயற்பாடு 06

* மனித தேவைகள் விருப்பங்களை நிறைவு செய்யும் வணிகங்கள் கீழே தரப்படுகின்றன.

- ♦ வெதுப்பக உற்பத்தி வணிகம்
- ♦ அரச வைத்தியசாலை
- ♦ யோக்கட் உற்பத்தி செய்யும் நிறுவனம்
- ♦ அரிசி மாவினை பொதி செய்து விற்பனை செய்யும் நிறுவனம்
- ♦ பாதணி உற்பத்தி நிறுவனம்

மேற்குறிப்பிட்ட வணிகங்களில் எதாவது மூன்றினை தெரிவு செய்க. அவற்றின் அடிப்படையில் கீழே கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்க

i. நீங்கள் தெரிவு செய்துள்ள ஒவ்வொரு வணிகங்களினாலும் மனித தேவைகள் விருப்பங்கள் நிறைவு செய்யப்படுகின்ற முறைகளை தெளிவுபடுத்துக

ii. அவ்வணிகங்களினால் வளங்களுக்கு பெறுமதி சேர்க்கப்படுகின்ற முறைகளை விளக்குக

iii. தெரிவு செய்யப்பட்ட வணிகங்களின் நோக்கங்களை வெவ்வேறாகக் குறிப்பிடுக

iv. அவ்வணிகங்களினால் எமது நாட்டுப் பொருளாதாரத்துக்கு கிடைக்கும் நன்மைகளைப் பட்டியல்படுத்துக



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## செயற்பாடு 07

* நீங்கள் பயன்படுத்தம் பின்வரும் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு பல்வேறு முறைகளை குறிப்பிடுங்கள்

| தேவைகள் | விருப்பங்கள் |
|---|---|
| 1) உணவு | |
| 2) ஆடையணிகள் | |
| 3) வசிப்பிடம் / உறைவிடம் | |
| 4) கல்வி | |
| 5) சுகாதாரம் | |
| 6) பாதுகாப்பு | |
| 7) போக்குவரத்து | |
| 8) தொடர்பாடல் | |
| 10) பொழுது போக்கு | |

## செயற்பாடு 08

* மனித தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற பல்வேறுபட்ட பொருட்கள், சேவைகள், சமகால வணிகர்களினால் ஆக்கப்பூர்வமான முறையில் சந்தைக்கு கையளிக்கப்படுகின்றன. இதற்கமைய கடந்த காலத்துடன் ஒப்பிடும் போது நிகழ்காலத்தில் மனித தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளுவதற்காக பல்வேறு பொருட்கள் சேவைகளைப் பயன்படுத்துகின்ற முறைகள் தொடர்பாக ஒப்பிட்டு ஆராயவும்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk